# பஸ் ஸ்டிரைக் எதிரொலி:

# கூடுதலாக மெட்ரோ ரெயில்கள் இயக்கம்!

சென்னை, பிப். 25—

பஸ் ஸ்டிரைக் காரணமாக இன்று அதிக அளவில் மெட்ரோ ரெயில்கள் இயக்கப்பட்டன. வழக்கமாக காலை 8 மணியில் இருந்து 10 மணி வரையும், மாலை 4 மணியில் இருந்து 7 மணிவரையும் சென்னையில் மெட்ரோ ரெயில்கள் 5 நிமிட இடைவெளியில் இயக்கப்படும். விம்கோநகர்— சென்னை விமான நிலையம்,

சென்னை சென்ட்ரல்— ஆலந்தூர், சென்னை சென்ட்ரல்—விமானநிலையம் ஆகிய வழித்தடங்களில் இந்த ரெயில்கள் இயக்கப்பட்டுவந்தன.

இன்று பஸ் ஸ்டிரைக் காரணமாக காலை 7 மணி முதல் 11 மணி வரை 5 நிமிட இடைவெளியில் மெட்ரோ ரெயில்கள் இயக்கப்பட்டன.

இன்று மாலை 4 மணி முதல் இரவு 8 மணி வரையும் அதிக அளவில் மெட்ரோ ரெயில்கள் இயக்கப்பட உள்ளன. மற்ற நேரங்களில் 7 நிமிடம் முதல் 12 நிமிடம் வரை கால அவகாசத்தில் மெட்ரோ ரெயில்கள் இயக்கப்பட்டு வருகின்றன.